உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

மாகேசுவரப் பூசைத் திருமுறைத் திருப்பாடல்கள்

மணமகன் தேவகோட்டை
சிவ ஸ்ரீ சுப அழகப்ப செட்டியார் மகன்,
திருவளர் செல்வன் : **பழனியப்பன் (எம் காம்)**

மணமகள் உயர்திரு பழ. உத்தமன் செட்டியார் மகள்,
திருவளர்செல்வி : **சௌந்திரம்**

திருமண நாள் : **22—10—1982**

வெள்ளிக்கிழமை, தேவகோட்டையில் நடந்த திருமண நினைவாக இந்நூல் 23—10—1982 நடந்த மாகேசுவரப் பூசையின்போது வெளியிடப் பெற்றது.

தேவகோட்டை
சிவஸ்ரீ தத்தபுருஷ தேசிகர் அவர்களால்
பார்வையிடப்பெற்றது.

உ

சிவமயம்

புராண படன பஞ்சரத்தினம்

௧

சைவர்கள், பல சமயத்தாருக்கும் பொது வகையால் வேண்டப்படும் இலக்கணங்களை முன்னே வழுவாது தழுவிககொண்டே, பின்பு தங்களுக்குச் சிறப்பு வகையால் வேண்டப்படும் இலக்கணங்களை உடையர்களாய் ஒழுகல் வேண்டும்.

௨

சிறப்புவகையாகிய இருபத்து மூன்று இலக்கணங்களுள் ஒன்றாகிய சிவ புராணங் கேட்டல். தான் ஓரிலக்கணமாய் நிற்றலன்றித் தன்னையும் தன்னை ஒழிந்த சிறப்பிலக்கணங்களையும் மற்றைப் பொதுவிலக்கணங்களையும் வருவித்தற்குக் கருவியாயும் நிற்றலுடையது

௩

சிவபுராணம் படித்துப் பொருள் சொல்லுவதற்கு உரிய இடங்களாவன தேவாலயம், திருமடம் நதிக்கரை குளக்கரை, திருநந்தனவனம், யாகசாலை முதலிய சுத்த ஸ்தானங்களாம்

௪

நாடோறும் புராணந் தொடங்கும்போதும் முடிக்கும் போதும் காப்புச் செல்லவேண்டும் காப்புக்கு முன்னும் பின்னும்

(நான்காம் பக்கம் மேலட்டைப் பார்க்க)

உ

சிவமயம்

பாலருவாயர் துணை

வாழ்த்துரை

"மண்ணினில் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும் அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்" என்பது சேக்கிழார் பெருமான் திருவாக்கு.

ஆசாரியர், நிருவாண தீக்ஷிதர், விசேஷ தீக்ஷிதர், சமய தீக்ஷிதர் என்னும் நால்வருமே சிவனடியாராவார். மற்ற வகைகளில் எத்துணைச் சிறப்புடைவராயினும், சிவதீக்ஷையில்லாதவரைச் சிவனடியார் என்று சைவ மரபு ஏற்றுக் கொள்ளாது. சிவனடியார்களை விதிப்படி பூசித்துத் திருவமுது செய்வித்தல். "மாகேசுவர பூசை"யாகும்.

ஆயிரம் வைதிகப் பிராமணருக்கு அன்னதானம் செய்த பலமும் ஒரு சமய தீக்ஷிவருக்குத் திருவமுதூட்டிய பலமும் ஒக்கும் பத்துச் சமய தீக்ஷிதருக்குத் திருவமுதூட்டிய பலம் ஒரு விசேட தீக்ஷிதருக்குத் திருவமுதூட்டிய பலத்துடனும் பத்து விசேட தீக்ஷிதருககுத் திருவமுதூட்டிய பலம் ஒரு நிருவாண தீக்ஷிதருக்குத் திருவமுதூட்டிய பலத்துடனும் நூறு நிருவாண தீக்ஷிதருக்குத் திருவமுதூட்டிய பலம் ஒரு சைவாசாரியருக்குத் திருவமுதூட்டிய பலத்துடனும் ஒக்குமென்று அருள் நூல்கள் கூறுகின்றன.

நடமாடும் கோயில்களாகிய மகேசுவரர்களே, படமாடும் கோயிற்பரமனுகவே எண்ணப்பெறுவார்கள். சைவர்கள் அனைவரும் சிவதீக்ஷை பெறும்போதும், விரதகாலம் யாத்திரைக் காலங்களிலும் திருக்கோயில்களில் நைமித்திக விழாக்கள் நடைபெறும்போதும் வீடுகளில் நடைபெறும் எல்லா மங்கல நிகழ்ச்சிகளிலும் மாகேசுவரபூசையைச் செய்வது இன்றியமையாததாகும்.

நம் அன்புருவாகிய அழகப்பசெட்டியாரவர்கள் தம் புதல்வன்செல்வன் பழநியப்பனுக்கும் செல்வி சௌந்தரத்திற்கும் நிகழ்ந்த திருமண நினைவாகச் செய்த மாகேசுவர பூசையில் அதற்குரிய இந்தச் சிறந்த வெளியீட்டை வெளியிடுகிறுர்கள்.

சமயம், விசேஷம், நிருவாணம் ஆகிய மூவகைத் தீக்ஷைகளையும் பெற்று முறையாகச் சிவபூசை புரிந்து சைவ சீலராக விளங்கும் அழகப்ப செட்டியாரவர்கள் நோயற்ற வாழ்வும் சிவஞானமும் பெற்று மேன்மையுறுவார்களாக. மணமக்கள், மக்களோடு மகிழ்ந்து மனையறம் காத்துச் சிவநெறி பேணிச் சிறப்புறுவார்களாக.

நலமே தழைக!

தேவகோட்டை
22—10—82

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்

உ
சிவமயம்

மாகேசுவர பூசைத் திருமுறைத் திருப்பாடல்களும், மாகேசுவர ஆசீர்வாதமும் அடங்கிய இச் சிறு தொகுப்பு நூல் நம் சைவ அன்பர்கள் மாகேசுவர பூசை செய்யும்போது பயன்பட உதவ வேண்டுமென்ற எண்ணத்தால் தொகுத்துள்ளது.

மாகேசுவர பூசை நடத்தும்போழ்து முறையாகப் பாட வேண்டிய திருப்பாடல்களைச் சில சமயங்களில் பாடுவதில்லை. முக்கியமாக மாகேசுவரப் பூசை செய்விக்கும் அன்பருக்கு ஆசீர்வாதம் கூறுவதில்லை. முன்பெல்லாம் முறையாக நடந்துவந்த பத்ததி அருகி, சமயத்திற்குப் பொருத்தமில்லாத பாடல்களைச் சொல்லிப் போசனம் செய்யத் தொடங்குகிறார்கள்.

இக்குறையினைப் போக்கவேண்டுமென்ற எண்ணத்தால் உந்தப்பட்டு மாகேசுவரப் பூசையின்போது முறையாக ஓதத்தக்க திருமுறைத் திருப்பாடல்கள் தொகுத்தளிக்கப்பட்டுள்ளது. அன்பர்கள் இதைப் பயன்படுத்தி அம்மையப்பர் திருவருளால் எண்ணிய எண்ணியாங்கு எய்தி இன்புற அவர் பொற்பாதக் கமலங்களை வணங்கிச் சிந்திக்கின்றேன்.

இவ்வரிய நூலினை தொகுத்துத் தந்து அடியேனை ஊக்குவித்த என் குருநாதர் சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்களுக்கு என் ஆழ்ந்த நன்றியினை பணிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுப. அழகப்பன்
சென்னை-1.

மாகேசுவர பூசைத் திருமுறை

தேவாரம்

திருச்சிற்றம்பலம்

1 அன்னம் பாலிக்குந் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே

திருத்தொண்டர் புராணம்

2 கொண்டு வந்து மனைப்புகுந்து குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலின் ஆதனத்திடை வைத்தருச்சனை செய்தபின்
உண்டி நாலு விதத்தி லாறு சுவைத்தி றத்தினில் ஒப்பிலா
அண்டர் நாயகர் தொண்ட ரிச்சையில் அமுது செய்ய
அளித்துளார்

3 அல்லார் கண்டத் தண்டர்பிரான் அருளால் பெற்ற
படிக்காசு
பல்லா றியன்ற வளம்பெருகப் பரமன் அடியா ரானார்கள்
எல்லாம் எய்தி உண்கவென இரண்டு பொழுதும் பறை
நிகழ்த்திச்
சொல்லால் சாற்றிச் சோறிட்டார் துயர்கூர் வறுமை
தொலைத்திட்டார்

4 பண்பின் மிக்கார் பலராய் அணையினும்
உண்ப வேண்டி ஒருவர் அணையினும்
எண்பெ ருக்கிய அன்பால் எதிர்கொண்டு
நண்பு கூர்ந்தமு தூட்டும் நலத்தினர்

5 தொண்டர் பலரும் வந்தீண்டி உண்ணத் தொலையா
அமுதூட்டிக்
கொண்டு செல்ல விருநிதியம் முகந்து கொடுத்துக்
குறைந்தடைவார்
வண்டு மருவுங் குழலுமையாள் கேள்வன் செய்ய
தாளென்னும்
புண்டரீகம் அகமலரில் வைத்துப் போற்றும் பொற்பினர்

6 காதலொடுந் தொழுதெடுத்துக் கொண்டு நின்று
கைகுவித்துப் பெருமகிழ்ச்சி கலந்து பொங்க
நாதர்விரும் படியார்கள் நாளும் நாளும் நல்விருந்தாய்
உண்பதற்கு வருக என்று
தீதில்பறை நிகழ்வித்துச் சென்ற தொண்டர் திருவமுது
கறிநெய்பால் தயிரென் றின்ன
ஏதமுறு தினிதுண்ண ஊட்டி அங்கண் இருதிறத்துப் பெருந்
தவரும் இருந்த நாளில்

7 "மண்ணினிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணி னால்அவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்
உண்மை யாமெனில் உலகர்முன் வரு'! கென உரைப்பார்

8 தூயதிரு அமுதுகனி கன்னல்அறு சுவைக்கறிநெய்
பாயதயிர் பால்இனிய பண்ணியம்உண் நீர்அமுதம்
மேயபடி யால்அமுது செய்விக்க மிசைந்தடியார்
மாயிருஞா லம்போற்ற வருமிவர்பால் மனமகிழ்ந்தார்

9 தனிவெள் விடைமேல் நெடுவிசும்பில் தலைவர் பூத கணநாதர்
முனிவர் அமரர் விஞ்சையர்கள் முதலா யுள்ளோர்
போற்றிசைப்ப
இனிய கறியும் திருஅமுதும் அமைத்தோர் காண
எழுந்தருளிப்
பனிவெண் திங்கள் முடிதுளங்கப் பரந்த கருணை
நோக்களித்தார்

10 ஆறணிந்த சடைமுடியார்க் காதிரைநாள் தொறுமென்றும்
வேறுநிறை வழிபாடு விளங்கியபூசனைமேவி
நீறணியுந் தொண்டரணைந் தார்க்கெல்லாம்
நிகழ்பசும்பொன்
நூறுகுறை யாமலளித் தின்னமுது நுகர்விப்பார்

11 மருவு மன்பொடு வணங்கினர் மணிகண்டர் நல்லூர்த்
திருவி ழாஅணி சேவித்துத் திருமடத் தடியார்
பெருகு மின்பமோ டமுதுசெய் திட வருள் பேணி
உருகு சிந்தையின் மகிழ்ந்துறை நாளிடை யொருநாள்

12 இன்ன வகையாற் பெற்றநிதி யெல்லா மீச னடியார்கள்
சொன்ன சொன்ன படிநிரம்பக் கொடுத்துத் தூய
போனகமும்
கன்ன னறுநெய் கறிதயிர்பால் கனியுள் ளுறுக
கலந்தளித்து
மன்னு மன்பி நெறிபிறழா வழித்தொண்டாற்றி வைகினர்.

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

மாகேசுவர பூசை ஆசிர்வாதம்

முதற்பெருங் கடவுளாகிய சிவபெருமான், உயிர்கள் வழிபட்டு உய்யும் பொருட்டுத் திருமேனி தாங்கி எழுந்தருளி யிருக்கும் எல்லாத் திருக்கோயில்களிலும் நாட் பூசனை, விழாப் பூசனைகள் வேத சிவாகம விதிப்படி நடந்துவரும் பொருட்டு அனுக்கிரகம் பண்ணுக.

ஹர ஹர ஹர ஹர ஹர.

விபூதி உருத்திராக்க தாரணம் ஸ்ரீ பஞ்சாட்சர .ஜெபம், வேத சிவாகம படனம் தேவா ராதி திருமுறைப் பாராயணம் ஆன்மார்த்த சிவபூசையாகிய சிவ புண்ணியங்கள் நாடெங்கும் பரவியோங்கும் பொருட்டு அனுக்கிரகம் பண்ணுக.

ஹர ஹர ஹர ஹர ஹர.

மாதம் மும்மழை தவருது பெய்து நீர்வளம், நிலவளம், பயிர் வளம் முதலிய எல்லா வளங்களும் செழித்தோங்கும் பொருட்டு அனுக்கிரகம் பண்ணுக.

ஹர ஹர ஹர ஹர ஹர.

செல்வச் சிரஞ்சீவி/சிவபூசைச் செல்வர்

அவர்களுக்கும் அவர்களது மனைவி மக்கள், உற்ருர் உறவினர், நண்பர்களுக்கும் நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம் சிவபத்தி சிவனடியார் பத்தி, குருபத்தி, சிவஞானம் முதலியன மென் மேலும் பெருக உண்டாகும் பொருட்டு அனுக்கிரகம் பண்ணுக.

மாகேசுவரர்கள் எல்லாரும் திருவமுது செய்தருளுக.

ஹர ஹர ஹர ஹர ஹர.

(இரண்டாம் பக்க மேலட்டைத் தொடர்ச்சி)

"திருச்சிற்றம்பலம்" என்று உச்சரித்தல் வேண்டும். காப்புச் சொல்லும்போது யாவருங் கும்பிட்டுக் கொண்டிருத்தல் வேண்டும்

ரு

புராணம் வாசிப்பவர் சபையார் யாவரும் கேட்கும் பொருட்டுத் தெளிவுபெற வாசித்தல் வேண்டும். வாசிக்குங் காலத்துக்கும் எடுத்துக்கொண்ட விஷயத்தினது குணத்துக்கும் ஏற்ற இராகத்தில் வாசித்தல் வேண்டும் எச்சுதியில் எவ்விராகத்தில் வாசிக்கப்படுகின்றதோ அச்சுதியில் அவ்விராகத்திற்றனே பொருள் சொல்லப்படல் வேண்டும் இலக்கணப் பிழையில்லாமலும், வெளிப்படையாகவும் இன்றியமையாவிடங்களில் விரிவாகவும் பொருள் சொல்லல் வேண்டும்.

—நாவலர்

ரவிசங்கர் பிரிண்டர்ஸ், சென்னை-600 007.